**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 - 2018**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) நீடிப்பதனூடாக வர்த்தக நகர் (கொழும்பு) மற்றும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கடற்துறைமுகம் (அம்பாந்தோட்டை) மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) என்பனவற்றிற்கிடையே தொடர்பினை பேனுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் பகுதி 4 இன் கீழான அந்தரவேவ ஊடான மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 25 கி.மீ இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 55,965 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 55,615 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 435 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 350 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மான வேலைகள் 2016 சனவரி 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 19 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜூலை 09 வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பின் மீதான இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதன் தாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டிதொகை ரூபா 3.36 மில்லியனிற்கு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | விபரங்கள் பிரதேச செயலகங்களிலிருந்து பெறப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 106.78 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் நமைுறைஅல்லாச் சொத்துக்களின் கீழ் வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாச் சொத்துக்கள் வேறாக வெளிப்படுத்த முடியாமல் போகக்கூடும். | இச்சொத்தக்கள் நிதிக்கூற்றுக்களில் வேறாக கணக்கிடப்பட வேண்டும் என்றால் இச் சொத்துக்களின் தொழில்சார் மதிப்பீட்டிற்காக மேலதிக கிரயங்கள் ஏற்படும். | சொத்துக்களின் கிரயம் வேறாக அடையாளப்படுத்தப்பட வேண்டியதுடன் நடைமுறை அல்லாச்சொத்துக்களின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்ததாரர்கள் இலங்கை ரூபாவிலும் அமெரிக்க டொலரிலும் கொடுப்பனவு செய்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்ததாரர்களிற்கு சீனா ஆர்எம்பீ(RMB) இல் கொடுப்பனவு செய்ததன் காரணமாக, ஒப்பந்ததாரரிற்கு ரூபா 205.7 மில்லியன் நட்டம் ஏற்படவேண்டியிருந்தது. இந் நட்டம் செயற்திட்டத்தினால் மீளப்பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | வழங்கியிருக்கவில்லை. | ஏற்பாடுகள் அல்லது வெளிப்படுத்தல்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| காணி சுவீகரிப்புச் செயன்முறையானது 2014 மே 21 இல் ஆரம்பிக்கப்பட்டு 2014 நவம்பர் 19 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், கூட்டுமொத்த தொகை ரூபா 4.1 மில்லியன் காணி சுவீகரிப்பு செயன்முறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்பாக செலுத்தப்பட்டிருந்தது, செயன்முறையானது 2018 திசெம்பர் 31 அளவில்கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இழப்பீடுகள் மீதான வட்டியாக மொத்தமாக ரூபா 3.36 மில்லியன் செலுத்தப்பட வேண்டும் என அது வெளிப்படுத்தியிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | காணி சுவீகரிப்பு செயன்முறை 2014 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டதுடன் செயற்திட்டத்தின் வேலை 2015 இல் அரசாங்க மாற்றத்தின் பின்னர் கைவிடப்பட்டு 2015 ஒக்டோபரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. காணி சுவீகரிப்பு செயன்முறையில் சில உரிமையாளர்களை உறுதிப்படுத்துவதில் சிக்கல் காரணமாக, உரிமைத்துவத்தீர்மானம் தாமதமடைந்திருந்தது. மேலும், நிதிகள் காணி கொள்வனவு கொடுப்பனவுகளிற்காக உரிய நேரத்தில் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஊக்கவிப்புக்களிற்கு கூட வட்டி செலுத்தவேண்டியிருந்தது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |